**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.35** **நாள் : 20.02.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் நெகிழிப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் நெகிழிப் பயன்பாட்டை குறைப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவ, மாணவியர் கலந்து கொள்ளும் மாரத்தான் ஓட்டம் சென்னை தீவுத்திடலில் 22.02.2025 அன்று நடைபெறவுள்ளது.**

தமிழ்நாடு அரசின் உத்தரவின்பேரில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து நெகிழிப்பொருட்களை சேகரித்து அகற்றுதல், நெகிழிப் பொருட்களால் ஏற்படும் சுகாதாரக்கேடுகள் மற்றும் அதற்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தீவிர விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் நெகிழிப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் நெகிழிப் பயன்பாட்டை குறைப்பது குறித் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை தீவுத்திடலில் 22.02.2025 அன்று காலை. மாணவ மாணவியர்கள், தன்னார்வலர்கள் பங்கேற்புடன் "**மாரத்தான் ஓட்டம்**" நடைபெறவுள்ளது. மேலும், இராயபுரம், தேனாம்பேட்டை மற்றும் அடையாறு ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இந்து, கிறிஸ்துவ, முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களில் நெகிழிப் பொருட்கள் சேகரிக்கும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு, நெகிழி ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளன.

பொதுமக்கள் மற்றும் வியாபார பெருமக்கள் அனைவரும் அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை உபயோகப்படுத்தி தூக்கி எறியக்கூடிய நெகிழிப் பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்த்து, அதற்கு பதிலாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**